நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2019

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

## தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு (ஆண்டு 5, 6)

## Level : Intermediate - Lower (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்

Time Given : 75 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

June 2019

**கீழே தரப்பட்டுள்ள 1 முதல் 3 வரையிலான வினாக்களுக்கு பன்மைச் சொற்களை எழுதுக.**

1. மனிதன்
2. நண்பன்
3. வந்தார்

**கீழே தரப்பட்டுள்ள 4 முதல் 8 வரையிலான வினாக்களுக்கு எதிர்ச் சொற்களைத் தருக**

4. இரவு
5. ஏற்றம்
6. நீதி
7. பெரிது
8. மகிழ்ச்சி

**கீழே தரப்பட்டுள்ள 9 முதல் 12 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வசனத்தில் கோடிட்ட சொல்லிற்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லை தருக.**

(அ) அன்னை (ஆ) தந்தை (இ) அரசன்
(ஈ) துக்கம் (உ) மகிழ்ச்சி (ஊ) கோவில்

9. ராஜ ராஜ சோழன் ஒரு <u>மன்னர்</u> ஆவார்.
10. <u>ஆலயம்</u> செல்வது சாலச் சிறந்தது.
11. எனது <u>அம்மா</u> மிகவும் அழகானவர்.
12. நான் பரீட்சையில் சித்தி அடைந்தமையால் அம்மா <u>சந்தோசம்</u> அடைந்தார்.

**கீழ்வரும் உரைப் பகுதியை வாசித்து 13 முதல் 15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

## திருக்குறள்

திருக்குறள் ஒரு சிறந்த தமிழ்மொழி இலக்கியமாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்களையும் கொண்டது.

திருக்குறளுக்கு முப்பால், தமிழ்மறை, உத்தரவேதம், பொய்யாமொழி, தெய்வநூல், பொதுமறை, ஈரடி நூல், வான்மறை, வாயுறை வாழ்த்து எனப் பல பெயர்கள் உள்ளன. இந்நூல் அனைவருக்கும் ஏற்ப நல்ல கருத்துக்களை கூறுகின்றது.

இந்நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நாம் எல்லோரும் திருக்குறளை நன்றாகக் கற்று அதன் வழி நடப்போமாக.



**13.** திருக்குறளை இயற்றியவர் யார்?

**14.** திருக்குறளின் வேறு பெயர்கள் இரண்டு தருக?

**15.** திருக்குறள் எந்த மொழி இலக்கியமாகும்?. சரியான விடையை தெரிவு செய்து எழுதுக.

தமிழ் / ஹிந்தி / சமஸ்கிருதம்

**கீழ்வரும் 16 முதல் 18 வரையான வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதவும்**

**16.** கம்ப இராமயணத்தை எழுதியவர் யார்?

திருவள்ளுவர் / கண்ணதாசன் / கம்பர்

**17.** கீழே தரப்பட்டவற்றில் பாரதியாரால் எழுதப்பட்டது எது?

இராமாயணம் / மகாபாரதம் / பாப்பாப்பாட்டு

**18.** நீங்கள் அறிந்த தமிழ் அறிஞர் பெயர் ஒன்று தருக.

**கீழ் வரும் 19 முதல் 23 வரையான வினாக்களுக்கான பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

(அ) சமூகம் (ஆ) தமிழரின் (இ) தமிழ்நாடு (ஈ) கிளித்தட்டு
(உ) உதைப்பந்தாட்டம் (ஊ) சிற்பக்கலை (எ) தந்தை

**19.** தமிழ்நாடு .................................... பிரதேசம்.

**20.** தமிழரின் கலைகளில் ஒன்று ....................................

**21.** பல குடும்பங்கள் ஒன்று சேர்வதால் .................................... உருவாகுகிறது.

**22.** குடும்ப உறவினர் யார்? ....................................

**23.** ....................................தமிழர்களின் விளையாட்டுக்களில் ஒன்றாகும்.

கீழ்வரும் 24 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லைத் தெரிவு செய்க.

(அ) அப்பாவும் அம்மாவும் (ஆ) தமிழர் பண்பாடு

(இ) யாவரும் கேளீர் (ஈ) சமூகம் (உ) பள்ளிவாசல்

24. பெரியோரை மதித்தல்
25. யாதும் ஊரே
26. பல குடும்பங்கள் ஒன்று சேர்தல்
27. இஸ்லாமியர்கள்
28. குடும்பத்தின் ஆதாரமாக விளங்குபவர்கள்

கீழ்வரும் 29 முதல் 33 வரையுள்ள சொற்களை பிரித்து எழுதவும்

29. வாழைப்பழம்
30. மாம்பழம்
31. மரவேர்
32. நாட்டுப்பற்று
33. மாமரம்

கீழ்வரும் 34 முதல் 38 வரையுள்ள வினாக்களுக்கு சொற்களை சேர்த்து எழுதவும்

34. பூ + சோலை
35. மண் + வீடு
36. மூன்று + வேந்தர்
37. பல் + பசை
38. பொன் + குடம்

கீழ்வரும் 39 முதல் 43 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லை தெரிவு செய்க.

39. (அ) விழா (ஆ) விலா (இ) விளா
40. (அ) கிலித்தட்டு (ஆ) கிளித்தட்டு (இ) கிழித்தட்டு
41. (அ) கலந்துரையாடல் (ஆ) கலந்துறையாடல் (இ) கழந்துரையாடல்
42. (அ) கிளக்கு (ஆ) கிழக்கு (இ) கிலக்கு
43. (அ) காளைநேரம் (ஆ) காழைநேரம் (இ) காலைநேரம்

**கீழ்வரும் 44 முதல் 46 வரையிலான வினாக்களுக்கு மிருகங்களின் இளமைப் பெயரை தெரிவு செய்க.**

(அ) குட்டி (ஆ) பிள்ளை (இ) குஞ்சு

**44.** கோழி

**45.** நாய்

**46.** தென்னை

**கீழ்வரும் 47 முதல் 48 வரையான வினாக்களுக்கு சரியானதைத் தெரிவு செய்க.**

**47.** (அ) உன் பெயர் என்ன? (ஆ) உண் பெயர் என்ன?

**48.** (அ) எணது பெயர் வாணி. (ஆ) எனது பெயர் வாணி.

**49.** (அ) அவன் பெயர் இராமன். (ஆ) அவண் பெயர் இராமன்.

**50. கீழ்வரும் தலைப்பில் ஒன்றை தெரிவு செய்து மூன்று வசனங்கள் எழுதவும்.**

- எனது குடும்பம்
- எனது பாடசாலை
- எனது வளர்ப்புப்பிராணி

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2019